யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

SHINE ON
J/CHAVAKACHCHERI LADIES' COLLEGE

2015 2016

# * பரிசில்நாளி *

## 20.06.2017

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி

தலைவர்

**திருமதி ல. முகுந்தன்**

(கல்லூரி முதல்வர்)

முதன்மை விருந்தினர்

**திருமதி தேவந்தினி பாபு அவர்கள்**

(பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்

**திரு. நா. கந்ததாசன் அவர்கள்**

(பிரதிக் கல்விப்பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம்
தென்மராட்சி கல்வி வலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

## 2015 - 2016

# பரிசில் நாள்

## 20.06.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் தூரநோக்கு
## (Vision)

எமது பலத்தையும் அர்ப்பணிப்பையும் இணைத்து சகல மாணவர்களினதும் கல்விப்புலமைக்கு வழிகாட்டி பிராந்தியத்தில் தலை சிறந்த பாடசாலையாக மிளிர்தல்

## நோக்கக் கூற்று
## (Mission)

தகுதி வாய்ந்த தூண்டுதலுடைய ஆசிரியர்கள் மூலம் பூரணத்துவமுடையதும் ஆக்கமலர்ச்சி யுடையதுமான கல்வியைப் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிப்பா

ராகம் : ஹரிகாம்போதி                                   தாளம் : ஆதி

வாழ்க எங்கள் தென்மராட்சி மகளிர் கல்லூரி - இன்பம்
சூழ்க கல்வி செல்வம் வீரம் செறிந்து வாழி பல்லூழி
ஆழ்கடலில் உதயமாகும் ஆதவனின் பேரொளி போல்
ஏழிசையும் தமிழர் பண்பும் எமக்களிக்கும் அன்னையாம் -
(வாழ்க)

செந்தமிழும் சேர்கலைகள் சீர்பெருகும் ஆங்கிலம்
விந்தைமிகு விஞ்ஞானமும் விளங்கு கணிதம் வர்த்தகம்
சுந்தர மனையியலும் சித்திரம் விவசாயமும்
வந்தனை பாடல் ஆடல் வனைதல் தொழில் கலைகளும் -
(வாழ்க)

எண்ணும் எழுத்தும் என்றும் நாம் கண்ணென மதிப்போமே
நண்ணும் கல்வி கலைகள் யாவும் நாடியே துதிப்போமே
மண்ணுலகில் பெண்மையென்றும் மாட்சி பெற்று மிளிர்வோமே
வண்ணத் தமிழ் பண்புதனை வளர்த்து ஒளி திகழ்வோமே-
(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினரை அழைத்து வருதல்
- கொடியேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புப்பா
- ஆசியுரை
- பரிசில்நாள் அறிக்கை – கல்லூரி அதிபர்
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்ச்சிகள்
  - மீனவர் நடனம்
  - நாட்டார் பாடல்
- சிறப்பு விருந்தினர் உரை
  - இயற்கையை நேசிப்போம் (சிறுவர் நாடகம்)
  - ஆங்கில நாடகம் (The necklace)
- முதன்மை விருந்தினர் உரை
  - நாட்டிய நாடகம்
- நன்றியுரை (சிரேஷ்ட மாணவ தலைவி)
- கல்லூரிக்கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில்நாள் அறிக்கை

பெருமதிப்பிற்கும், பேரன்பிற்குமுரிய முதன்மை விருந்தினர் பிரதேச செயலர் திருமதி.தேவந்தினி பாபு அவர்களே!

சிறப்பு விருந்தினர் மதிப்பிற்குரிய திருவாளர் நாகப்பர் கந்ததாசன் அவர்களே! பிரதிக்கல்விப்பணிப்பாளர்களே!, உதவிக்கல்விப் பணிப்பாளர்களே!, அயற்பாடசாலை அதிபர் களே!, முதன்மை ஆசிரியர்களே!, வலயக்கல்வி அலுவலர்களே!, கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களே! நகர்ப்பகுதி வங்கி உத்தியோகத்தர்களே!, வர்த்தகப் பெருமக்களே!, கல்லூரியின் முன்னாள் அதிபர் ஆசிரியர்களே!, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, பழைய மாணவர்களே!, பெற்றோர்களே!, நலன்விரும்பிகளே, கல்லூரி அறிவுசார் ஆசிரியர்களே!, அன்புசால் மாணவச் செல்வங்களே!, கடமையே கண்ணாய்க் கொண்டு செயற்படும் கல்விசாரா உத்தியோகத்தர்களே! உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த வணக்கம்.

இப்பரிசில் நாளில் தங்கள் அனைவரையும் இன் முகத்துடன் வரவேற்று இப்பரிசில்நாள் அறிக்கையை சமர்ப்பிப் பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**பெருமதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் அவர்களே!**

செல்வத்தினை அள்ளித்தரும் நெற்களனிகளும் கற்பக தருவாம் பனை மரங்களும் நிறைந்த தென்மராட்சிப் பிரதேசத்தில் மறவன்புலவு என்னும் ஊரிலே செல்வரத்தினம் நாகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியாகப் பிறந்த தாங்கள் ஆரம்பக்கல்வியை மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்திலும், இடைநிலை உயர்தரக்கல்வியை எமது கல்லூரியிலும் சிறப்பாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுத்தேர்ந்தீர்கள். வணிகமாணிப்பட்டதாரி ஆகிய தாங்கள் 01.01.1996 தொடக்கம் 3.12.2003 வரை ஆசிரியராகக் கடமையாற்றியபோது பட்டப்பின்கல்வி டிப்ளோமாவையும், பின்னர் பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றீர்கள்.

04.12.2003இல் இருந்து நாடளாவிய சேவையான இலங்கை நிர்வாக சேவைக்குள் பிரவேசித்து, பிரதேசசெயலராக வலிகாமம் மேற்கு, காரைநகர், ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றியதுடன் தங்களது சீரிய பணியினை தற்போது தாங்கள் பிறந்த மண்ணிலேயே அதாவது தென்மராட்சியில் வழங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். தங்களது பணி எமது பிரதேசத்தில் சிறப்புடன் அமைய வாழத்துவதுடன் தாங்கள் எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுள்ளமை எங்களது கல்லூரிக்குப் பெருமை அளிக்கின்றது. தங்களை வரவேற்பதில் எமது உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது.

**சிறப்பு விருந்தினர் அவர்களே!**

வளங்கொளிக்கும் வடமராட்சி மண்ணின் தவப் புதல்வனாக யாழ் ஹாட்லிக் கல்லூரியின் புகழ்பூத்த மாணவனாகச் செயற்பட்ட எமது பிரதிக்கல்விப்பணிப்பாளராகிய தாங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டத் தினையும் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப்பட்டத் தினையும் பெற்று இலங்கை கல்விநிர்வாக சேவை மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப்பரீட்சையில் பொது ஆளணியில் 2013 இல் சித்தி பெற்றுள்ளீர்கள். ஆங்கிலம், சிங்களம், தமிழ் மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற தாங்கள் எமது கல்விப்புலத்தின் மேம்பாட்டிற்காக அரும்பணியாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். தாங்கள் எமது விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்ததையிட்டு கல்லூரிச்சமூகம் பெருமகிழ்வடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆளணியின் விபரம்

- முதுதத்துவமாணிப் பட்டதாரி - 01
- முதுவிஞ்ஞானமாணிப் பட்டதாரி - 01
- முதுகல்விமாணிப்பட்டதாரிகள் - 03
- முதுகலைமாணிப்பட்டதாரிகள் - 02
- விஞ்ஞானமாணிப் பட்டதாரிகள் - 04
- வர்த்தகமாணிப் பட்டதாரிகள் - 02
- கலைமாணிப் பட்டதாரிகள் - 20
- கல்விமாணிப் பட்டதாரிகள் - 03
- நுண்கலைப் பட்டதாரிகள் - 02
- விசேட பயிற்சி பெற்றோர் - 06
- கற்பித்தலில் தேசிய டிப்ளோமா - 03

**47**

## மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | தொகை |
|---|---|---|---|
| 01-05 | 121 | 117 | 238 |
| 06-09 | - | 131 | 131 |
| 10-11 | - | 97 | 97 |
| 12-13 | - | 113 | 113 |
| மொத்த மாணவர் தொகை | | | 579 |

## ஆசிரிய குழாத்துடன் இணைந்தோர்

- திருமதி லெ. இ. இராதிகா (பிரதி அதிபர்)
- திரு. க. சரவணபவான்
- திருமதி சு. இராஜசேகர்
- செல்வி நா. கமலநந்தினி
- திருமதி சு. சிறிஸ்கந்தராசா
- திரு. ச. உருத்திரமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருமதி ய. கலாகரன்
- திருமதி த.தீபன்
- திருமதி த.சசிகரன்
- திருமதி கே.சிவனொளிபவன்
- திருமதி கி.கஜன்
- திருமதி து.முரளீதரன்
- திரு. ம.சசிகரன்
- திருமதி சி.கோவிந்தராஜா
- திருமதி யா.பவிராஜ் (தற்காலிக இணைப்பு)

**இடமாற்றம் பெற்றுச்சென்றோர்**

- திருமதி.ம.லோகீசன்
- திரு.க.வேலாயுதநாதன்
- திருமதி நா.ஆறுமுகம்
- திருமதி பா.திலீபன்
- திருமதி த.தீபன்
- திருமதி த.சசிகரன்
- திரு. சா.டினேஸ்குமார் (பாடசாலைப்பணியாளர்)

**ஓய்வு பெற்றுச் சென்றோர்**

- திரு. இ.கணேசலிங்கம் (ஆய்வுகூட உதவியாளர்)
- திருமதி பத்மாவதி நாகரட்ணம்

எமது கல்லூரியில் கணித பாட ஆசிரியராக 24 வருடங்கள் சேவையாற்றிய திருமதி பத்மாவதி நாகரட்ணம் அவர்கள் 01.10.2016 இல் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். ஆய்வுகூட உதவியாளராக 08 வருடங்கள் கடமையாற்றிய திரு.இ.கணேசலிங்கம் அவர்கள் 07.07.2017 அன்று ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இவர்களது ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை ஆளணியினர்

எமது கல்லூரியின் உயர்விற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் துணை ஆளணியினரின் பங்கு மிகவும் இன்றியமையாதது. அந்த வகையில் பின்வரும் துணை ஆளணியினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

| | |
|---|---|
| காவலாளர் | 02 |
| பாடசாலைப் பணியாளர் | 01 |
| சுகாதாரப் பணியாளர் | 01 |

## பரீட்சைப் பெறுபேறுகள்

### தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சை

| ஆண்டுகள் | 2015 | 2016 |
|---|---|---|
| தோற்றியோர் | 36 | 67 |
| சித்தியடைந்தோர் | 05 | 05 |
| சித்தியடைந்தோர் வீதம் | 14% | 07% |
| 70புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் வீதம் | 86 % | 84 % |

### க.பொ.த (சா/த)

| ஆண்டுகள் | 2015 | 2016 |
|---|---|---|
| தோற்றியோர் | 38 | 39 |
| உ/த கற்கத் தகுதி பெற்றோர் | 17 | 26 |
| தகுதி பெற்றோர் வீதம் | 45% | 66% |

### க.பொ.த (உ/த)

| ஆண்டுகள் | 2015 | 2016 |
|---|---|---|
| தோற்றியோர் | 27 | 25 |
| பல்கலைக்கழகத்தகுதி பெற்றோர் | 21 | 14 |
| தகுதி பெற்றோர் வீதம் | 77% | 56% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்கலைத் திட்ட செயற்பாடுகள்

**விளையாட்டுத்துறை**

எமது கல்லூரி மாணவர்கள் பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலயமட்ட, மாகாணமட்ட நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

**பூப்பந்து**— 2015, 2016 ஆகிய இரு ஆண்டுகளிலும் 15 வயதுப்பிரிவினர் இரண்டாம் இடத்தினையும், 19 வயதுப்பிரிவினர் முதலாம் இடத்தினையும் வலய மட்டத்தில் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தள்ளனர்.

**மேசைப்பந்து**— 2015 ,2016 ஆகிய இரு ஆண்டுகளிலும் 15,19 வயதுப்பிரிவினர் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டனர். 2016இல் 15 வயதுப்பிரிவினர் மாகாணமட்டத்தில் கால் இறுதிவரை போட்டியிட்டு அரை இறுதிக்குத் தெரிவாகியமை பாராட்டுதற் குரியது.

**கரப்பந்து**— 2015, 2016 ஆகிய இரு ஆண்டுகளிலும் வலய மட்டத்தில் 15,19 ஆகிய இரு வயதுப்பிரிவினரும் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கிரிக்கற்**- வலய மட்டத்தில் 2015ஆம் ஆண்டில் 19வயது கிரிக்கற் பிரிவினர் இரண்டாம் இடத்தினையும் 2016ஆம் ஆண்டில் நான்காம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

**கரம்** - 2014ஆம், 2015ஆம் ஆண்டில் 15வயதுப் பிரிவினர் இரண்டாம் இடத்தினையும் 19வயதுப் பிரிவினர் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடற்பயிற்சிப் போட்டி**– 2016 ஆம் ஆண்டில் காலை உடற்பயிற்சிப் போட்டியில் மாகாண மட்டத்தில் ஆறாம் இடத்தைப் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியது.

**மெய்வல்லுநர் போட்டிகள்** - எமது கல்லூரி மாணவர்கள் மெய்வல்லுநர் போட்டிகளில் வலய மாகாண மட்டங்களில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர். 2016ம் ஆண்டில் 17 வயதுப் பிரிவில் செல்வி சி.பாமதி முப்பாய்ச்சல் நிகழ்வில் வலய மட்டத் தில் முதலாமிடத்தையும், நீளம் பாய்தலில் இரண்டாமிடத்தி னையும் பெற்று மாகாணப்போட்டியில் பங்குபற்றியமை சிறப்பிற்குரியது.

**வணிகத்துறை** – எமது கல்லூரியில் வணிகத்துறைசார் விடயங்கள் குறித்த துறையினரால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. க.பொ.த (உ/த) வகுப்பு மாணவர்கள் வங்கிகளின் முகவர்களாகச் செயற்பட்டு மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்கு வித்து வருகின்றனர். மேலும் வணிகப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்று வருகின்றனர் அந்த வகையில் 2016ஆம் ஆண்டில் வலயமட்ட வர்த்தகப்பேச்சுப் போட்டியில் செல்வி சி.சிவரம்யா இரண்டாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**ஆரம்ப பிரிவுப் போட்டிகள்**

- 2015, 2016ஆம் ஆண்டுகளில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக் கான வலய மட்டப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்களும் பங்கு பற்றி தேர்ச்சிகளைப் பெறுவது சிறப்பிற்குரியதாகும். 2015 ஆம் ஆண்டில் வலய மட்ட ஆரம்பப் பிரிவு "செயற்பட்டு மகிழ்வோம்" இறுதிப் போட்டியில் தரம்-4, தரம் 5 மாணவர்கள் முதலாமிடத்தினையும், தரம்-3 மாணவர்கள் 3ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தினையம் பெற்றுள்ளமை மிகவும் சிறப்பான பெறுபேறாகும். 2016இல் தரம்-4 மாணவர்கள் 1ஆம் இடத்தினையும், தரம் 5 மாணவர்கள் 3ஆம் இடத்தினையம் பெற்றுள்ளனர். தரம்-4 மாணவர்கள் மாகாண மட்டத்தில் 6ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர். மேற்படி தரம்-4 மாணவர்கள் 2016ஆம் ஆண்டு இரத்தினபுரியில் நடைபெற்ற தேசிய மட்டப்போட்டியில் பங்கு பற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

- ஆரம்பக்கல்விப்பிரிவிற்கான IMACS போட்டியில் பங்குபற்றி ஐந்து மாணவர்களும் வெற்றியீட்டினர்.
- வலயமட்ட சித்திரப்போட்டியில் பங்குபற்றி தரம் 4 மாணவி சு.இந்திகா இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.
- சதுரங்கப்போட்டியில் தரம் 1 ஐச் சேர்ந்த மாணவி சு.துர்க்கா மூன்றாம் இடத்தினையும், மோ.ஆருத்திரன் தேர்ச்சியையும் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியது.

**தகவல்தொழில்நுட்ப வினாடிவினாப்போட்டி**

2015இல் வலயமட்ட தகவல்தொழில்நுட்ப வினாடிவினாப் போட்டியில் பிரிவு 1ஐச் சேர்ந்த செல்வன் S. தருணன், செல்வன் S.மதுமினன் ஆகியோரும், பிரிவு IVஐச் சேர்ந்த செல்வி.S.ஜனந்தியும் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2016இல் பிரிவு IIIஐச் சேர்ந்த செல்வி. சி.சாம்பவியும், பிரிவு IVஐச் சேர்ந்த செல்வி.பூ.துவாரகாவும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**தமிழ்மொழி கலைத்திறன் போட்டி** – 2015இல் தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் வலயமட்டத்தில் இரண்டு முதலாமிடங்களும் மூன்று இரண்டாமிடங்களும் ஆறு மூன்றாமிடங் களும் கிடைத்தன. 2016 இல் மூன்று முதலாமிடங்களும் நான்கு இரண்டாமிடங்களும் ஆறு மூன்றாமிடங்களும் கிடைத்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்டத்தில் தரம் 13 சூ.பிறேணுகா அவர்கள் இலக்கிய விமர்சனம் போட்டியில் இரண்டாமிடத்தினைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**ஆங்கில மொழித்திறன் போட்டி** – எமது பாடசாலையில் ஆங்கிலதினப் போட்டிகளில் பெருமளவில் மாணவர்கள் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் மாவட்ட மாகாணமட்டங்களில் வெற்றியீட்டி வருகின்றனர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற வலயமட்ட ஆங்கிலமொழித்திறன் போட்டியில் ஒரு முதலாமிடமும் நான்கு இரண்டாமிடங்களும் இரண்டு மூன்றாமிடங்களும் கிடைத்துள்ளன. 2016ஆம் ஆண்டில் எட்டு முதலாமிடங்களும் ஒரு இரண்டாமிடமும் ஒரு மூன்றாமிடமும் கிடைத்துள்ளது. அத்தடன் "Junior Drama" முதலாமிடத்தினைப் பெற்று மாகாணமட்டத்தில் பங்கு பற்றியமையும் சிறப்பிற்குரியது.

**சமயத்துறை** - வருடாந்தம் இந்து, கிறிஸ்தவ சமயங்களுடன் தொடர்பான நிகழ்வுகள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் சமயசிந்தனைகளும், ஆன்மீக சிந்தனைகளும் வழங்கப்படுகின்றன. மற்றும் நாயன்மார்களின் குரு பூசைத்தினங்கள் சமய விழாக்கள் குறிப்பாக தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, ஒளிவிழா என்பன கொண்டாடப் படுகின்றன.

நவராத்திரி காலங்களில் கோலப்போட்டி, பூமாலை கட்டுதல் போட்டி, தோரணம் கட்டும் போட்டி என்பன மாணவர்களிடையே நடாத்தப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். 2015இல் வலயமட்ட சைவசமய கண்காட்சியில் இரண்டு இரண்டாமிடங்களும் மூன்று மூன்றாமிடங்களும் கிடைத்துள்ளன. கோலம் போடுதல் நிகழ்வில் து.பிரவீனா வலயமட்டத்தில் முதலாமிடத்தினையும் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தினையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016இல் வலய மட்ட கோலப்போட்டியில் செ.றோயிதா முதலாம் இடமும், தோத்திரப் பாடல்கள் எழுதும் போட்டியில் நா.கீர்த்திகா முதலாமிடமும் பெற்றுள்ளனர். அத்துடன் ஆறுமுக நாவலர் ஞாபகார்த்தப் போட்டியில் ந.காயத்திரி அவர்கள் வெற்றி பெற்று பாராட்டும் பரிசில்களும் பெற்றுக்கொண்டார். து.பிரவீனா கோலப்போட்டியில் மாகாணமட்டத்தில் இரண்டாமிடத்தினையும் பெற்றுள்ளார். 2016இல் சைவபரிபாலனசபை நடாத்திய சமயப் போட்டியில் சி.ஆர்த்தியாவும் தமிழ்மொழிப் பரீட்சையில் ச.சகானா, க. டர்சிகாவும் வெற்றி பெற்று ஆறுதல் பரிசு பெற்றுள்ளார்.

தமிழ் மொழிப் பரீட்சையில் 2016ஆம் ஆண்டில் இரண்டு மாணவர்கள் ஆறுதற்பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். 2016இல் வலயமட்டப் பண்ணிசைப்போட்டியில் பங்கு பற்றி இரண்டு மாணவர்கள் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியது.

ஆசிரியர்களுக்கான சைவசமய கண்காட்சியில் திருமதி க.ஞானராஜா அவர்கள் வலயமட்டத்தில் இரண்டாமிடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கிறிஸ்தவ அறிவுப் போட்டி** – கிறிஸ்தவ சமயத்தை சேர்ந்த மாணவர்களும் பேச்சு பாடல் போட்டி போன்றவற்றில் வலயமட்டத்தில் பங்குபற்றி வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர். அந்த வகையில் 2016ஆம் ஆண்டில் மூன்று மாணவிகள் முதலாமிடத்தினையும் இரண்டு மாணவிகள் இரண்டாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

**கணித விஞ்ஞானத்துறை** – 2015இல் நடைபெற்ற விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் சி.ஆர்த்தியா அவர்கள் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். கணித ஒலிம்பியாட் போட்டியில் தரம் 8ஐச் சேர்ந்த நான்கு மாணவர்கள் வலயமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். 2015 இல் விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் சி.ஆர்த்தியா அவர்கள் வலயமட்டத்தில் இரண்டாமிடத்தினைப்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றியமை பாராட்டுதற்குரியது. மேலும் 2015 இல் வலயமட்ட விஞ்ஞான செய்முறைப் போட்டியில் ஒரு முதலாமிடமும் நான்கு இரண்டாமிடங்களும் இரண்டு மூன்றாமிடங்களும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டில் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் ஸ்ரீ. ஆர்த்தியா இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றினார். கணித வினாடிவினாப்போட்டியில் ஸ்ரீ.ஆதிரை வலய மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

**சமூக விஞ்ஞானப் போட்டி** – எமது பாடசாலை மாணவர்கள் சமூகவிஞ்ஞான போட்டிகளில் வலய மாவட்ட மாகாண மட்டங்களில் பங்கு பற்றி வெற்றியீட்டி வருகின்றனர். 2015இல் வலய மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற ஒரு மாணவி மாகாணமட்டப் போட்டியில் கலந்து கொண்டார். 2016ஆம் ஆண்டில் வலயமட்டத்தில் இரண்டு மாணவர்கள் இரண்டாமிடத்தினையும் இரண்டு மாணவர்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றியதுடன் த.அர்ச்சகி மாகாணமட்டத்தில் இரண்டாமிடத்தினையும் த.தட்சியா மூன்றாமிடத்தினையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

**இரண்டாம் மொழி (சிங்களம்) போட்டி** எமது பாடசாலை மாணவர்கள் சிங்களம் எழுத்து, வாசிப்பு, பேச்சு, எழுத்தாக்கம் போட்டிகளில் பங்கு பற்றி வலய மட்டத்தில் சாதனை படைத்துள்ளனர். அந்த வகையில் 2015ஆம் ஆண்டில் ஒரு முதலாமிடத்தினையும் நான்கு இரண்டாமிடத்தினையும் நான்கு மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர். 2016ஆம் ஆண்டில் இரண்டு முதலாமிடங்களையும் இரண்டு இரண்டாமிடங்களையும் மூன்று மூன்றாமிடங்களையும் பெற்றுக் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண தேசியமட்டப் புத்தாக்கப்போட்டி** -2015இல் எமது கல்லூரி மாணவி செல்வி இ.அபிசா அவர்கள் "Simple Letter Box" ஒன்றினை புத்தாக்கம் செய்து மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் பங்கு பற்றி மூன்றாமிடத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளமை பாராட்டுதற்குரியது.

**பொதுப் போட்டிகள்** - எமது கல்லூரி மாணவர்கள் பாடசாலையில் மட்டுமன்றி பொது நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் நடாத்துகின்ற போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றியீட்டி பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் 2015இல்சர்வதேச முதியோர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் இரண்டு முதலாமிடங்களும் ஒரு இரண்டாமிடமும் கிடைக்கப் பெற்றமை பாராட்டுக்குரியது. 2016இல் பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய இலக்கியப்போட்டியில் சிங்களக் கையெழுத்து நிகழ்வில் வலயமட்டத்தில் இரு மாணவிகள் முதலாமிடத்தையும், மாகாண மட்டத்தில் ஒரு முதலாமிடமும் ஒரு இரண்டாமிடமும் கிடைத்தமை பாராட்டத்தக்கது.

2016இல் உலக உளநலத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் ஒரு மாணவி இரண்டாமிடத் தையும் ஒரு மாணவி மூன்றாமிடத்தையும் மூன்று மாணவிகள் ஆறுதல் பரிசினைப் பெற்றுக் கொண்டமை பாராட்டுதற்குரியது.

**சத்திவளக் கழகப்போட்டி** – சக்தி வளகழகப் புத்தாக்கப் போட்டியில் செல்வி வத்சலா தவராசா பங்கு பற்றி மாகாண மட்டத்தில் மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துள்ளார். "சக்தி வளத்தைப் பாதுகாப்போம்" என்னும் கருப்பொருளில் 12 மாணவிகள் வீதி நாடகம் ஒன்றினை ஆற்றுகை செய்து மாகாணமட்டத்தில் முதலாமிடத்தினையும் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தினையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்ததுடன் பெறுமதிமிக்க பரிசில்களையும் பெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளமை மிகவும் பாராட்டுதற்குரியது.

இவ் வீதி நாடகத்தினைத் தயாரித்து நெறிப்படுத்திய திருமதி சி.புஸ்பராசா அவர்களுக்கும் சக்திவள பொறுப்பாசிரியர் திருமதி த. ஜீவபாலன் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கற்றல் வளநிலையம் (நூலகம்)**

1AB பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட கற்றல் வளநிலையப் போட்டியில் 2015இல் இரண்டாம் இடமும், 2016இல் முதலாம் இடமும் பெற்றுள்ளமை பாராட்டு தற்குரியது.

மாணவர்களின் தேவைகளை அதிகரிக்கவும், கற்றல் செயற்பாட்டிற்கும் கற்றல் வளநிலையம் பல்வேறு வகைகளில் உதவி வருகிறது. தற்போது எமது கற்றல் வளநிலையம் புதுமெருகூட்டப்பட்டு அரும் பொருட் காட்சியகம், சிறுவர் பகுதி, 3Dபகுதி என்பன அமைக்கப்பட்டு மாணவர்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வருடாவருடம் வாசிப்பு மாதத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டி பரிசில்களும் பெற்று வருகின்றனர். அத்துடன் தொங்கு நூலகம் அமைத்து மாணவர்கள் பயன்பெற வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளமை பாராட்டு தற்குரியது.

**மாணவர் மன்றங்கள்**- திறமை, ஆற்றல், ஆளுமை ஆகிய பண்புகளை வெளிக்கொண்டுவரும் வகையில் இலைமறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாக இருக்கும் மாணவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் வகையிலும், வாரம்தோறும் புதன்கிழமைகளில் ஆரம்பக்கல்வி மன்றம், இடைநிலை மாணவர் மன்றம், உயர்தர மாணவர் மன்றம் என மன்றங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பாடரீதியாக ஆற்றல்களை மேம்படுத்தும் வகையில் கணித விஞ்ஞான மன்றம், தமிழ்மன்றம், சமயமன்றம், சமூகவியல் மன்றம், கணிணி தொழிநுட்பவியல் மன்றம், கவின்கலை மன்றம், என்ற வகையில் பல மன்றங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு கலை நிகழ்வுகள் கருத்துக் குவியல்களை தாங்கியவாறு மன்றச் செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

**மாணவர் அமைப்புக்கள்**

மாணவர்களை மனித நேயம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு உடையவர்களாக உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து எமது கல்லூரியில் மாணவர் முதல்வர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு, பெண் சாரணர், குருளைச் சாரணர், சுகாதாரக்குழு, சூழல் பாதுகாப்புக்குழு, மாணவர் நலன்புரி ஆலோசணைக்குழு, பெண்வழிகாட்டுநர், புத்தாக்கக் கழகம், வாசகர் வட்டம், பேண்தகு பாடசாலை செயற்குழு, பாடசாலை வன்பொருள் வலையமைப்பு தீர்வு அணி ஆகிய அமைப்புக்களும் செயற்பட்டு வருகின்றன.

**பாடசாலை மாணவர் பாராளுமன்றம்**

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முதன்முதலாக எமது பாடசாலையிலேயே மாணவர் பாராளுமன்றம் 29.05.2015 இல் அமைக்கப்பட்டு சின்னம் சூட்டும் நிகழ்வும் அதன் கன்னி அமர்வும் இடம்பெற்றது. அதன் பிரகாரம் 10 அமைச்சர்களும் 10 பிரதி அமைச்சர்களும் தெரிவு செய்யப்பட்டு பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளும் இவ்வமைச்சர்களின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றன. தற்போது மூன்று அமர்வுகள் நடைபெற்று பல செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றமை பாராட்டுதற்குரியது.

**கல்லூரிச் சேவையாளர் சங்கம்**

எமது கல்லூரி ஆசிரியர்கள் குடும்பமாகப் பணியாற்றும் சூழலை உருவாக்குவதில் ஆசிரிய சகோதரத்துவத்தின் பங்கு அளப்பரியது. ஆசிரியர்களின் நலன்களைக் கவனிப்பதுடன் அவர்களுக்கிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தியும், சேவை நலன்களைப் பாராட்டியும், சுக துக்க நிகழ்வுகளில் பங்கு பற்றியும், வருவதுடன் பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்வதிலும் கல்லூரிச்சேவையாளர் சங்கம் அருஞ்சேவையாற்றி வருகின்றது.

**சுகாதார மேம்பாட்டுப் போட்டி – 2015** இல் நடாத்தப்பட்ட சுகாதார மேம்பாட்டுப போட்டியில் எமது கல்லூரி மாகாண மட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தினைப் பெற்றதுடன் 2016இல் 91 புள்ளிகளைப் பெற்று வலயமட்டத்தில் முதலாம் இடத்தினையும், மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கத்தினையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தமை சிறப்பான விடயமாகும். இதன் பொறுப்பாசிரியரான திருமதி கா.பிரதாபன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

**ஆசிரியர் மாநாடு** - 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற வலயமட்ட ஆசிரியர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு ஆய்வுக் கட்டுரைகளில் இரண்டு ஆய்வுக்கட்டுரைகள் எமது கல்லூரி ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனை சமர்ப்பித்த திருமதி இ. ஜீவேந்திரா, திருமதி வ. நகுலேஸ்வரதாசன் ஆகிய ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

மேலும் ஆசிரியர் மாநாட்டை முன்னிட்டு நடைபெற்ற ஆசிரியர்களுக்கான வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் வலைப்பந்து நிகழ்வில் எமது கல்லூரி ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் மெய்வல்லுநர் போட்டிகளிலும் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ஆறிற்கும் மேற்பட்ட வெற்றிகளை பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டனர்.

**பாடசாலை அபிவிருத்திக் குழு**

கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக இருக்கும் பாடசாலை அபிவிருத்திக் குழு கல்லூரியின் பௌதீக வளத்தேவைகளை நிறைவு செய்வதிலும் கல்லூரி நிகழ்வுகளை நல்ல நிலையில் நடாத்துவதிலும் அளப்பரிய பங்காற்றி வருகிறது. மேலும் இன்றைய பரிசளிப்பு நிகழ்வு சிறப்புற நிகழ்வதற்கு நகர்ப்பகுதி வர்த்தக நிறுவனங்களிடம் நிதி சேகரிப்பு பணியில் ஈடுபட்ட இக்குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்பு**

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கல்லூரியை அழகு படுத்துவதிலும் கல்லூரியின் தேவைகளை அறிந்து தாமாகவே முன் வந்து செயற்படுவது மகிழ்ச்சிக்குரிய தாகும். மேலும் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நோர்வே கிளையின் நிதிஅனுசரணையில் கல்லூரிக்கு அழகான முகப்பு வளைவு நிர்மாணிக்கப்பட்டு 21.01.2016 அன்று வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.கு.கிருஸ்ணகுமார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அக்கல்லூரி அதிபர் திரு.ந.சர்வேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தார். இவர்களது அரும்பணியினால் கல்லூரி அழகுடன் மிளர்கின்றது. இவர்களது மகத்தான பணிக்கு இவ்வேளையில் நன்றி கூறுகின்றேன்.

**மகளிர் கல்லூரி பரிசளிப்பு நிதியம்**

எமது கல்லூரியில் தற்போது பரிசளிப்பு நிதியம் ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கியுள்ளோம். அதன் பிரகாரம் ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியர்களான செல்வி.ப.ரட்ணம், திருமதி தியாகராசா அவர்கள் குறிப்பிட்ட தொகை நிதியினை வைப்புச்செய்து அதன் வட்டித் தொகையினை பரிசில் நாளுக்கு பயன்படுத்துமாறும் வேண்டியிருந்தார்கள். இந் நோக்கத்திற்காக முன்னர் வழங்கியிருந்த நிதியுடன் எமது முன்னாள் அதிபர் திருமதி சி.சிவநாதன் அவர்கள் பதவியுயர்வு பெற்றுச் சென்ற வேளைவழங்கிய ரூபா 50000.00 நிதியையும், மற்றும் தற்போது ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியை திருமதி.ப.நாகரட்ணம் அவர்கள் வழங்கிய ரூபா50000.00 நிதியினையும், ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இ.ஜீவேந்திரா அவர்கள் வழங்கிய ரூபா 25000.00 நிதியினையும், பழைய மாணவியான திருமதி நி.இரவீந்திரன் அவர்கள் வழங்கிய ரூபா10000.00 நிதியினையும் சேர்க்கும் வேளையில் இந்நிதியத்தின் மொத்தத் தொகையாக 05.06.2017இல் ரூபா 203292.00 உள்ளது. இந் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்த அனைத்த உள்ளங்களுக்கும் எமது நன்றிகள். இனி வருங்காலங்களிலும் இந் நிதியத்தின் வட்டித்தொகை மாணவர்களின் பரிசளிப்பு விழாவிற்காக பயன்படுத்தப்படும். இப்பரிசளிப்பு நிதியத்தின் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் பரிசளிப்பு விழாவினை மேலும் சிறப்புற நடாத்த முடியும் என்பது எனது நம்பிக்கை.

**அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைச் செயற்றிட்டம்.**

நல்லாட்சி அரசின் அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைச் செயற்றிட்டத்திற்காக பிரதேச செயலக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு வகை "A" பாடசாலையாக எமது பாடசாலை உள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் செயற்றிட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் "D" block கூரை திருத்தம் மற்றும் வேலைகளுக்காக 2மில்லியன் ரூபாவும், ஆரம்ப இடைநிலைப் பிரிவு மலசல கூடங்கள் அமைப்பதற்காக 2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் நிறைவடைந்துள்ளன. மேலும் சுமார் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லியன் செலவில் பெருந்திருத்த வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அத்துடன் இத்திட்டத்தின் கீழ் அதிபர் விடுதி அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதுடன், சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான ஆரம்ப பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இத்திட்டத்தின் கீழ் மேலும் பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவுள்ளன.

**தேவைகள்**

மாணவிகள் இலகுவாகவும் பாதுகாப்பாகவும் துவிச்சக்கர வண்டியினை நிறுத்தி வைப்பதற்கான துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைக்கப்பட வேண்டியது அவசிய தேவையாக உள்ளது. அத்துடன் பாடசாலையின் உள்ளக வீதியும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

**நிறைவுரை**

எமது கல்லூரியின் இப்பரிசில் நாள் நிகழ்விற்கு வருகை தந்து எமது கல்லூரியையும் எம்மையும் பெருமைப்படுத்தியதோடு, எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கி மகிழ்விக்க இருக்கும் முதன்மை விருந்தினர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் திரு.நா.கந்ததாசன் (பிரதிக்கல்விப்பணிப்பாளர் -கல்வி முகாமைத்துவம்) அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

இப்பிரதேசத்தில் கல்விப்பணியை ஆற்றி வரும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், அரச பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இன்றைய விழாவினைச் சிறப்பிப்பதற்காக பல்வேறு வழிகளிலும் நிதியுதவி வழங்கிய சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகப் பிரமுகர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் கூறக் கடமைப்பபட்டுள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழா சிறப்புற அமைவதற்கு சகல வழிகளிலும் உதவி நல்கிய பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இனிய நன்றிகள்.

மேலும் கல்வியின் உயர்விற்காக பற்றுடனும் கடமையுணர்வுடனும் சேவையாற்றி சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக எமது அழைப்பை வருகை தந்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றி கூறி அமர்கின்றேன்.

நன்றி

அதிபர்
**திருமதி ல. முகுந்தன்**
யா/ சாவகச்சேரி மகளிர்க் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/Chavakachcheri Ladies College
## Academic Staff - 2017

| NO | Full Name | Edu/ Prof . Qualification |
|---|---|---|
| 1 | Mrs.Lalithamalar Mugunthan | B.B.A(Hons), PGDE, M.Phil (Edu) SLPS2 |
| 2 | Mrs.Irathika Lenard Indika | B.A PGDE SLPS3 |
| 3 | Mrs.Balajeevini Sivakumaran | BSC, PGDE |
| 4 | Mrs.Thevamanohari Sivaramachchandran | Spl Trd(Eng), Dip in Eng |
| 5 | Mrs.Gnaneswary Sivapalan | Trd(Primary) |
| 6 | Mrs.Vikneswary Manivannan | Trd(Primary) B.Ed, |
| 7 | Mrs.Pavalamalar Prabaskaran | Trd(Tamil),B.A, PGDE |
| 8 | Mrs.Valarmathy Naguleswarathasan | B.A , PGDE , M.Ed, |
| 9 | Mrs.Srisvary Pushparajah | Trd(Primary), B.Ed |
| 10 | Mrs. Malarvily Antonthavarasa | Trd(Primary) |
| 11 | Mrs. Jeyaluxmi Maheswaran | Special Tr (Eng) , Dip in English, B.A Eng |
| 12 | Mrs. Mangalakalyani Sivanesan | Dip inTeahing (Primary).B.A (Hons)PGDE |
| 13 | Mrs. Tharsini Peethamparan | Dip In Dance, PGDE |
| 14 | Mrs. Rubavathani Sivakumar | B.A, PGDE |
| 15 | Mrs. Manoraji Tharmaseelan | Dip in Teching (Maths) |
| 16 | Mrs. Karthika Prathaban | B.A(Hons), PGDE |
| 17 | Mrs.Atputharatnam Mahendran | B.A(Hons), PGDE |
| 18 | Mrs.Gamini Chandrabalan | B.Com, PGDE |
| 19 | Mrs.Sasikala Ratheeswaran | B.A(Hons), PGDE |
| 20 | Mr.Balasingam Sevverl | Dip In Teaching (Primary), B.A , PGDE |
| 21 | Mrs.Gunaragini Sivanantham | B.A (Hons ), PGDE |
| 22 | Mrs.Yugasothiambikai Visakapperumal | Trd(Primary) |
| 23 | Mrs.Thillainayahe Nadarajah | B.A (PGDE - Pandict) |
| 24 | Mrs. Kajenthini Gnanarajah | B.A (Hons) , PGDE |
| 25 | Mrs. Suseeladevi Ganesh | B.A (Hons), PGDE, M.Ed |
| 26 | Mrs Thayalini Jeevabalan | Dip In Teaching(Science), B.Ed |
| 27 | Mr.Karthikesu Ramachandran | B.Sc, PGDE |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 28 | Mrs.Perinparani Nagarajah | B.A(Hons), PGDE |
| 29 | Mr.Sinnaiah Nithiyanantharajah | B.B.A, PGDE |
| 30 | Mrs.Salothiska Andrews Thivianesan Jeevanandam | B.A, PGDE |
| 31 | Mrs.Jasmina Kalakaran | Dip in Teaching(ICT-E) |
| 32 | Mrs.Kumuthini Jeganthan | B.A , PGDE |
| 33 | Mr.Sellaiya Ratnam Mahendran | Spcl Trained Art |
| 34 | Mrs.Hamsayini Krisnarasan | BSc(Hons), PGDE |
| 35 | Mr.Sanmugam Karunakaran | B.A (Hons), PGDe, M.A |
| 36 | Mr.Kanthasamy Saravanabavan | BSc(Hons), PGDE, M.ED |
| 37 | Mrs.Subashini Rajasekar | Dip in Teaching(H.Ec), , B.A, PGDE |
| 38 | Miss. Nagamuththu Kamalananthini | Spcl Trained Commerce |
| 39 | Mrs.Srikantharanjah Subathradevi | Dip In Music , PGDE |
| 40 | Mr.Sathasivam Uruthiramoorthy | B.Sc, PGDE, PGDPA, MSc |
| 41 | Miss. Tharmkulasingam Havitha | Dip In Teaching (Science - E) |
| 42 | Mrs.Ketheeswari Sivanolipavan | B.A , PGDE |
| 43 | Mr.Mahendran Sasikaran | Dip In Teaching (Maths -E) , B.Sc (Hons ), |
| 44 | Mrs.Kovindarajah Srilatha | B.A (Hons), PGDE |
| 45 | Mrs.Giriththiga Kajan | Dip in Teaching (English) , B.A |
| 46 | Mrs.Thurairajani Muraleetharan | B.A (Hons), PGDE, M.A |
| 47 | Mrs.Jaleni Paviraj | B.A |

## Non Academic Staff

| | | |
|---|---|---|
| 1. | Mr. S. Thanabalasingam | Watcher |
| 3. | Mrs. T. Parameswaran | School Labourer |
| 4. | Mrs. T. Gunaneswaran | Sanitary Labourer |
| 6. | Mr. K. Sukumar | Watcher |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/Chavakachcheri Ladies' College
## Prize List – 2015, 2016

**Grade 1A [2016]**

| Serial no | Name | Prize for |
|---|---|---|
